பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 74

31.08.2026

கடந்த 01.08.2026 முதல் 31.08.2026 வரை தமிழகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையால் 19 பொறிவைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அலுவல் ரீதியான பணிகளைச் செய்வதற்காக ரூ.1,000/- முதல் ரூ.3,00,000/- வரை லஞ்சம் கேட்டு பெற்ற அரசு ஊழியர்கள் (வருவாய் கோட்டாச்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி செயற் பொறியாளர், இளநிலை பொறியாளர், இளநிலை உதவியாளர், உதவி மின் பொறியாளர், மின் வாரிய வணிக ஆய்வாளர், செயலாளர், கிராம நிர்வாக அலுவலர், காவல் உதவி ஆய்வாளர், கிராம உதவியாளர், உதவியாளர்) ஆகியோர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலும் தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆய்வு குழு அலுவலர்களுடன் இணைந்து பல்வேறு அரசு அலுவலகங்களில் திடீர் சோதனை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அலுவலகங்களிலிருந்து கணக்கில் வராத ரொக்கம் ரூ.28,24,945/- கைப்பற்றப்பட்டது மற்றும் G Pay ரூ.89,89,663/- கண்டறியப்பட்டது ஆக மொத்தம் 1,18,14,608/-. மேலும் மாநில எல்லைகளில் அமைந்துள்ள வாகன சோதனை சாவடிகளில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் வராத ரொக்கம் ரூ.3,36,200/- கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் திடீர் சோதனைகளில் ரொக்கம் ரூ.31,61,145 கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் கணக்கில் வராத பணம் ரூ.1,21,50,808/- இதன் தொடர்ச்சியாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஊழல் வழக்கில் 01.08.2026 முதல் 31.08.2026 வரை (3 வழக்குகள்) திருநெல்வேலி ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் மற்றும் திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றங்களால் அப்போதைய கிராம நிர்வாக அதிகாரி, ஆதிதிராவிட நல அலுவலர், ஆதிதிராவிட நல கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர்களுக்கு 2 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத் தண்டனையும் ரூ.2,000/- முதல் ரூ.20,000/- அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 74
31.08.2026

Between 1st August 2026 and 31st August 2026, the Directorate of Vigilance and Anti-Corruption (DVAC) laid 19 traps across state on government officials (Joint Commissioner (Revenue Divisional Officer, Block Development Officer, Assistant Executive Engineer, Assistant Engineer, Junior Assistant, Commercial Inspector, Secretary, Village Administrative Officer, Village Officer, Sub Inspector of Police, Assistant) who demanded and accepted bribes ranging from Rs.1,000 to Rs.3,00,000 for performing official duties were arrested.

During the above period, DVAC officials, along with District Inspection Cell officers, conducted surprise checks at various government offices located all over Tamil Nadu. The operation led to the seizure of Rs. 28,24,945/- in unaccounted cash and Rs.89,89,663/- in suspicious financial transactions through G-Pay, bringing the total amount to Rs.1,18,14,608/- Additionally, surprise checks at State border vehicle check post led to the seizure of Rs.3,36,200 in unaccounted cash. Altogether, Rs. 31,61,145/ unaccounted cash seized. Suspicious G Pay Rs.89,89,663/- Total unaccounted money Rs.1,21,50,808/-. Cases were registered, and investigations are underway.

During the period from 1st August 2026 to 31st August 2026 (3 cases), Special Courts for Prevention of Corruption Act cases, as well as the Principal and Sessions Courts in Tirunelveli, Trichy and Perambalur, convicted a Adi Dravida Welfare Officer, Adi Dravida Superintendent, Village Administrative Officer and Inspector of Police. The courts sentenced them to rigorous imprisonment ranging from two to four years, along with fines ranging from Rs.2,000 to Rs.20,000.
